| | |
|---|---|
| | **பொள்ளாச்சி நகராட்சி**<br>**06.01.2020 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட தீர்மானம்** |
| 2035) | தமிழக அரசின் ஆணைப்படி பொள்ளாச்சி நகராட்சிக்கான பாதாளச்சாக்கடை திட்ட செயலாக்கத்திற்கு அரசாணை எண்.531(D), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.24.15.2014–ல் ரூ.109.62 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தமிழக அரசின் அரசாணை எண்.95 ந.நி.(ம) இவ (ந.நி.3) துறை நாள்:11.02.2015–ன் படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பொள்ளாச்சி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயலாக்க உத்திரவு வழங்கப்பட்டது.<br>பொள்ளாச்சி நகராட்சிக்கான பாதாள சாக்கடை திட்ட செயலாக்கத்தில் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உரிய விதிகள் பின்பற்றி தலைமை பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோவை அவர்களின் பணி ஆணை கடித எண்:F.Pollachi UGSS/SDO (T3)/CBE/2016 date: 16.09.2016–ல் படி திருவாளர்கள்.சுபையா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு ஒப்பந்தப்பணிகள் 13.10.2016 முதல் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.<br>நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பொள்ளாச்சி அவர்களின் கடிதம் எண்.Lr.No.F.Pollachi UGSS /RP Cost/ SDO /2018 Dated:22.02.2018–ல் பல்வேறு காரணங்களில் திட்ட மதிப்பீட்டில் கூடுதல் செலவு ஏற்படுகிறது எனவும், மொத்த தொகை ரூ.170.22 கோடி ஒதுக்கீடு செய்யுமாறும் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் இந்நகராட்சி நகரமன்ற தீர்மான எண்.822 நாள்.28.02.2018–ல் கூடுதல் தேவையினை மானியமாக பெற மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நிதி உதவி கோரி கடிதம் அனுப்பப்பட்டது.<br>அதன் அடிப்படையில் CGF நிதியில் 2018–19 ஆம் ஆண்டிற்கு ரூ30.00 கோடியும், 2019–2020 ஆம் ஆண்டிற்கு ரூ.30.60 கோடியும், மொத்தமாக ரூ.60.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி சாலை சீரமைப்பு பணி, ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் கூடுதல், மத்திய மாநில சேவை வரி, கூடுதல் வீட்டு இணைப்புகள் (3950 எண்ணிக்கை), நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை மற்றும் ரயில்வே துறைகளுக்கு சாலை சீரமைப்பு கட்டணம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தரப்படுத்தப்பட்ட விலை விபரப் பட்டியலினால் ஏற்படும் வித்தியாச தொகை, தொழிலாளர் நல நிதி இவைகளின் காரணமாக கூடுதல் செலவு ரூ.60.60 கோடி செலவு ஏற்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.<br>மேற்கண்ட கூடுதல் செலவுகள் பணி முழுமையாக முடிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. அதற்கிணங்க ரூ.60.60 கோடி மூலதன மானிய நிதி (CGF) அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதி ஒதுக்கீடுகளை உபயோகித்து பணிகள் நடைபெற்று வருகிறது.<br>ரூ.109.62 கோடி மற்றும் கூடுதல் நிதி ரூ.60.60 கோடி ஆக மொத்தம் ரூ.170.22 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருவதால், மொத்த செலவு ரூ.170.22 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழியாக திருத்திய நிர்வாக அனுமதி பெற அரசை கேட்டுக் கொள்ளலாம். |
| 2036) | பொள்ளாச்சி நகராட்சியினை 14–வது மத்திய நிதிக்குழு 2019–2020–ன் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள இரு தவணை முறையில் விடுவிக்க ரூ.577.26 இலட்சம் அனுமதிக்கப்பட்டு தற்போது முதல் தவணை ரூ.290.00 இலட்சம் (50%) பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டப்படி 8 சாலைப்பணிகளை மேற்கண்ட முதல் மானிய தவணை தொகையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண். | வேலையின் பெயர் | வார்டு எண். | சாலையின் நீளம் கி.மீ | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ரங்கசாமி லே அவுட் மற்றும் கரிகாளியம்மன் கோவில் வீதி ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 5 | 0.43 | 21.50 |
| 2 | நாச்சிமுத்து வீதியில் தார்தளம் அமைத்தல். | 15 | 0.62 | 39.00 |
| 3 | எஸ்.ஆர்.எம்.எஸ் மில் வீதி, மாரப்பன் வீதி, அன்சாரி வீதி மற்றும் பாலகோபாலபுரம் வீதி ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 15 | 0.86 | 45.00 |
| 4 | பயோஸ்கோப் வீதி மற்றும் ராமகிருஷ்ணாபுரம் வீதி ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 14 | 0.69 | 36.00 |
| 5 | அன்சாரி வீதி, பாலகோபாலபுரம் வீதி, சி.பி. ராமகிருஷ்ணா லே அவுட் மற்றும் தந்தை பெரியார் வீதி ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 10,11,14 | 0.76 | 40.00 |
| 6 | கிருஷ்ணசாமி லே அவுட் மற்றும் அழகம்மாள் லே அவுட் ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 10,22 | 0.49 | 31.00 |
| 7 | குமரன் நகர் முதல் லே அவுட், குமரன் நகர் இரண்டாம் லே அவுட், கல்லுக்குழி வீதி மற்றும் வள்ளியம்மாள் லே அவுட் ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 22,23 | 0.89 | 46.50 |
| 8 | இந்திரா நகர் சர்ச் வீதி, சத்தியமூர்த்தி வீதி, ஆண்டாள் வீதி, சங்கரர் வீதி மற்றும் அசோகர் வீதி ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 7,35 | 0.53 | 31.00 |
| | | | 5.25 | 290.00 |

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கூடுதல் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2037)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.28 ல் சத்திரம் வீதி மற்றும் தெப்பக்குளம் வீதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு ரூ.15.00 **இலட்சம்** மதிப்பீட்டிற்கு 27.06.2019 ஆம் தேதியில் முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.98% அதிகம். |
| 2. | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 5.22% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.98% அதிகமானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்காணும் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட அதிகமானதாக உள்ளதால் ஒப்பந்ததாரர் திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களிடம் 27.06.2019 அன்று விலைகுறைப்பு கோரப்பட்டது.

அதன்படி ஒப்பந்ததாரர் தனது விலை குறைப்பு கடிதத்தில் 2019-20 ஆண்டிற்கு பொதுப்பணித்துறையின் விலைவிகித அட்டவணைப்படி (Standard Schedule of rate) கட்டுமான

| | |
|---|---|
| | பொருட்களின் விலை உயர்வு செய்யப்பட்டுள்ளதாலும், தற்போது கட்டுமான பொருட்களின் விலை ஏற்றும் ஆட்கள் கூலி உயர்வு, டீசல் விலை உயர்வு வண்டி வாகன வாடகை, உயர்வின் காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் 2 இனங்களில் மட்டும் விலை குறைப்பு செய்து சம்மதக்கடிதம் கொடுத்துள்ளனர். அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்பு செய்தும் மதிப்பீட்டை விட 4.50% அதிகமானதாக உள்ளது.<br>எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.50% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண்.1591 நாள்.27.06.2019 –ல் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.50% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்கள் கட்டுமான பொருட்கள் விலை உயர்வு, வாகன வாடகை உயர்வு மற்றும் ஆட்கள் கூலி உயர்வு போன்ற காரணங்களால் ஒப்பந்தப்புள்ளியில் விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரர் திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 2847/2019/இ1 |